# சிறுவர் துஷ்பிரயோகம்: அம்பாரை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவினை அடிப்படையாகக் கொண்டது

**எல்.ரி. முகம்மட் இயாஸ்**
பிரதேச செயலகம், சாய்ந்தமருது
iyasltm@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு சமூகப் பிரச்சினையாக சிறுவர் துஷ்பிரயோகம் காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் அது நாட்டின் சுபீட்சத்தையும், சிறுவர்களின் எதிர்காலத்தையும் நாசமாக்கி விடுமோ என்ற அளவுக்கு அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது. இந்தவகையில், அண்மைக்காலமாக சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரிவுகளில் சிறுவர் துஷ்பிரயோகமானது அதிகமாக இடம்பெற்றுக் கொண்டு வருவதை அவதானிக்கலாம். இப்பிரதேசத்தில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் அநேகமானவை பெற்றோர், வளர்ப்புப் பெற்றோர், பராமரிப்பாளர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள், தொழில் வழங்குனர்கள், வயோதிபர்கள் மற்றும் அயலவர்கள் போன்றவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களால் சிறுவர்கள் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் மற்றும் பாலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டு பல்வேறு உடல் மற்றும் உளத் தாக்கங்களுக்குள்ளாகியுள்ளனர். இவற்றின் தாக்கங்கள் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும், உள விருத்தியிலும் மற்றும் ஆளுமை விருத்தியிலும் பல்வேறு பாதிப்பைச் செலுத்தியுள்ளன. இந்தவகையில், இவ்வாய்வானது சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான காரணிகளைக் கண்டறிந்து அவற்றை வெளிப்படுத்த முயற்சி செய்வதையும், அதற்கான தீர்வுகளை இனங்காண்பதையும் மற்றும் இனிவரும் காலங்களில் ஏற்படும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வினை மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறையியலாக பகுப்பாய்வு, விளக்க மற்றும் விபரண முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும், இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையாக அவதானிப்பு, பேட்டிமுறை, மற்றும் வினாக்கொத்து முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பிற்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவாக, சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரிவுகளில் அண்மைக் காலங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதால் சிறுவர்கள் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளைத் தற்கால சமூகத்தில் எதிர்நோக்கியுள்ளனர். எனவே, இப்பிரதேசத்தில் நிகழும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து மக்களுக்குத் தெளிவுபடுத்தி, அதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து அதனைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இவ்வாய்வு ஆராய்ந்து தெளிவுபடுத்துகிறது.

***பிரதான சொற்பதங்கள்***: *ஆளுமை விருத்தி, உளவியல் பிரச்சினைகள், பாலியல் துஷ்பிரயோகம்*

## ஆய்வின் அறிமுகம்

இலங்கையில் சிறுவர் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்து வருவது குறித்து நாட்டின் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கவலையும், கண்டனமும் வெளியிட்டுள்ளது. இந்த வருட ஆரம்பம் முதல் இம்மாதத்தின் முற்பகுதி வரை 6500 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன் 5 வயதுடைய சேயா செதவ்மியின் படுகொலை, காத்தான்குடி 08 வயதான பாத்திமா சீமா என்ற சிறுமி கொலை செய்யப்பட்டமை, வித்தியாவின் படுகொலை போன்ற சம்பவங்கள் அகில இலங்கை மட்டத்தில் பாரிய அச்சத்தை

ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சிறுவர்களின் பாதுகாப்பு விஷயத்தில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இந்நிகழ்வுகள் வலியுறுத்தி நிற்கின்றன.

இந்தவகையில், சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அண்மைக்காலமாக சிறுவர் துஷ்பிரயோகங்களால் குழந்தைகளும், சிறுவர்களும் தினமும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வழிமுறைகளும், சட்டதிட்டங்களும், தண்டனைகளும் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இப்பகுதியில் தினமும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

சிறுவர்கள் என்றால் யார், சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன, இப் பிரதேசங்களில் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் எவை, துஷ்பிரயோகங்களிலிருந்து எவ்வாறு சிறுவர்களைப் பாதுகாக்க முடியும் போன்ற அறிவுடன் கூடியதான விழிப்புணர்வு இன்று ஒவ்வொரு தனி நபருக்கும் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது. சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகவும், சிறுவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பட்டயம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் 1991ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினாலும் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இலங்கையில் 18 வயதிற்குக் குறைந்த சகலரும் சிறுவர்களாகக் கருதப்படுகின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது 'சிறுவர்களை அவர்களின் இயல்புகளுக்கும், தன்மைகளுக்கும் முரணாகப் பிழையாகப் பயன்படுத்துதல்' எனலாம். உலக சுகாதார நிறுவனம் சிறுவர் துஷ்பிரயோகம் என்பதைக் கீழ்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது. 'சிறுவர்களை உடல் ரீதியாக அல்லது உணர்வு ரீதியாகப் பாதிப்படையச் செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், புறக்கணித்தல், வர்த்தகம் அல்லது வேறு விடயங்களுக்காக அவர்களைச் சுரண்டல் போன்றவற்றின் மூலம் அவர்களின் ஆரோக்கியம், உயிர் வாழ்தல், வளர்ச்சி மற்றும் கௌரவம் போன்றவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துதல்' சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படும்.

பொதுவாக சிறுவர் துஷ்பிரயோகமானது பல்வேறு வடிவங்களில் அரங்கேற்றப்படுகின்றது. உடலியல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகம் எனப் பல்வேறு கோணங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

உடலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் எனும் போது அடித்தல், காயப்படுத்தல், அங்கங்களைச் சிதைத்தல் போன்ற தண்டனைகள் அடங்குகின்றன. சிறுவர்களை நிராகரித்தல், திட்டுதல், சாபமிடுதல், மானபங்கப்படுத்தல், பயமுறுத்தல், தனிமைப்படுத்தல் போன்றன உளவியல் ரீதியான துஷ்பிரயோகமாகக் கொள்ளப்படுகின்றன. பாலியல் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களைத் தொடுதல், வருடுதல், பொருத்தமற்ற பாலியல் சொற்களைப் பயன்படுத்துதல், பாலியல் தொந்தரவுகளைக் கொடுத்தல், பாலியல் செயற்பாடுகளைப் பார்ப்பதில் ஈடுபடுத்தல், போன்ற செயற்பாடுகளில் சிறுவர்களை ஈடுபடச் செய்வதாகும். ஒரு சிறுவனுக்குரிய உடை, உணவு, சுகாதாரம், பாதுகாப்பு, மருத்துவம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுகின்ற போது அச்சிறுவன் புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றான்.

அண்மைக்காலங்களில் இப்பிரதேசத்தில் தந்தையின் மூலமாக பெண் சிறுமிகள் கர்ப்பமடைதல், சிறுவர்கள் சூடு வைக்கப்படுதல், தவறான முறையில் பெண் பிள்ளைகள் கர்ப்பம் தரித்தல், பகுதி நேர வகுப்புகளுக்கு செல்லும் சிறுமிகள் பாலியல் தொந்தரவுக்குள்ளாதல், ஆசிரியர்களால் உடல், உள ரீதியாகத் தண்டிக்கப்படல், சிறுவர்களின் புகை மற்றும் மதுப்பாவனை, காதல் பிரச்சினை, பிள்ளைகளுக்குரிய உரிமைகள் வழங்கப்படாமை, சிறுவர்களை வேலைக்கமர்த்தல் போன்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

இலங்கையின் குற்றவியல் சட்டத்தின்படி, யாராவது சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால் அவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டால் குற்றவாளி உடனடியாக 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுவார். அதிகபட்சமாக 03 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின் வழக்குத் தொடரப்படும். 03 மாதத்தின் பின் நீதிபதி விரும்பினால் அவருக்கு நிபந்தனையுடன் கூடிய பிணை (ஜாமின்) கொடுத்து வெளியில் அனுப்பலாம். இம்மாதிரியான சம்பவங்களில் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு சராசரியாக 8 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியுள்ளதால் பெரிய அளவில் வழக்குகள் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. முக்கியமான விடயம் என்னவெனில், உலகின் பெரிய ஜனநாயக நாடாக மதிக்கப்படும் இந்தியாவில் இந்தக் குற்றத்தைத் தடுக்க எவ்வித சட்டமும் இல்லை. இந்தவகையில், இலங்கை ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

அண்மைக்காலமாக ஏன் சாய்ந்தமருதுப் பிரதேச செயலகப் பிரிவுகளில் சிறுவர் துஷ்பிரயோகமானது அதிகரித்துக் கொண்டு செல்கின்றது?

**ஆய்வின் நோக்கம்**

**பிரதான நோக்கம்**

✓ இப்பிரதேசத்தில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோக வகைகளை அடையாளம் கண்டு, அவற்றை மக்களுக்குத் தெளிவுபடுத்தி, அவற்றை முற்தடுப்பு செய்து குறைக்க முயற்சித்தல்

**துணை நோக்கங்கள்**

- துஷ்பிரயோகங்களுக்கான காரணங்களைக் கண்டறிதல்
- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுகளையும் அதிகரித்தல்
- சிறுவர் துஷ்பிரயோகத்துக்குட்பட்ட சிறுவர்களுக்கு சட்ட ரீதியிலான உதவிகளையும், உளவியல் ரீதியிலான சிகிச்சைகளையும் பெற்றுக் கொடுத்தல்
- பிரதேச மட்ட சிறுவர் துஷ்பிரயோக கண்காணிப்புக் குழுக்களின் நடவடிக்கைகளை அதிகரித்தல்

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது விபரண, விளக்க மற்றும் பகுப்பாய்வு முறை என்பனவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வுக்காக முதல்நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகள் பலவும் ஆய்வின் தேவையினைக் கருத்திற் கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக நேரடி அவதானிப்பு, நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் என்பன அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள்,

கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத் தரவுகள், ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பெறுபேறுகளும் வியாக்கியானங்களும்**

இப்பகுதியில் காணப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகங்களைப் பார்க்கும் போது இங்கு ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் இரு பாலாரும் பாதிப்படைந்துள்ளனர். இப்பிரதேசத்தில் காணப்படும் அதிக துஷ்பிரயோகங்களில் உடலியல் ரீதியிலான மற்றும் பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்துக் காணப்பட்டுள்ளன. இப்பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுவதில் குறைந்தளவு சமூகப் பொருளாதார நிலைமைகளே அதிக செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. அதில், துஷ்பிரயோகம் பற்றிய அறிவீனம், பெற்றோரின் போதைப்பாவனை, குடும்ப வன்முறை, பெற்றோரின் வெளிநாட்டுப் பயணம், தவறான சகவாசம், தனிமை, தாய் தந்தை பிரிவு, அன்பு கிடையாமை, படிப்பறிவின்மை, பொருளாதாரச் சிக்கல்கள், சமூக வலைத்தளங்களினூடான தவறான நண்பர்களின் சகவாசம், இணையத்தைத் தவறாகப் பயன்படுத்தல் போன்றவற்றை சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் ஆளாவதற்குப் பிரதான காரணங்களாக குறிப்பிட்டுக் காட்டலாம்.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதன் காரணமாக அவர்களில் கல்வி சீர்குலைதல், பாடசாலை இடைவிலகல், அறிவு, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சி பெருமளவு பாதிப்படைதல், சமூகத்தால் இழிவுபடுத்தப்படல், குற்றவாளியாக முத்திரை குத்தப்படல், முறையற்ற அல்லது தவறான பாலியல் நடத்தைகளில் ஈடுபடப் பழகுதல், உளப் பிரச்சினைகளுக்குள்ளாதல், பிள்ளை பெரியவனான பின்னர் பாலியல் சார்ந்த செயல்களில் ஈடுபடல், பாலியல் நடத்தை தொடர்பான பயமும், தாழ்வு மனப்பான்மையும் ஏற்படல், திருமணம் தொடர்பான அச்சம் ஏற்படல், பாலியல் நோய்களுக்கு ஆளாகுதல் போன்ற பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுகின்றன.

பாதிப்படைந்த சிறுவர்களுக்கான உடலியல் மற்றும் உளவியல்சார் தொந்தரவுகளைத் தவிர்த்து முன்னேற்றமடையச் செய்யக்கூடிய ஆதரவுச் சேவைகள் இன்று பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கக்கூடியதாக உள்ளன. மேலும், பாதிப்படைந்த சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதாலும், நீடித்த சட்ட தீர்ப்புக்களாலும், குறித்த பிரச்சினைகள் அதிகளவு மீடியாக்களில் விளம்பரப்படுத்தப்படுவதாலும், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஆராய்வதற்கும், முகாமை செய்வதற்குமான நிறுவனங்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இன்மையாலும் மென்மேலும் சிறுவர்கள் தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர்களாவர். பாடசாலை ஆசிரியர்களுக்கும் இவ்விடயம் தொடர்பில் முக்கிய பொறுப்புள்ளது. பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வயதுப் பிரிவுக்கேற்ற வகையில் பாலியல் கல்வி போதிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இப்பிரச்சினை தொடர்பில் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரும் பங்களிப்பு வழங்க வேண்டியது மிக அவசியமாகும்.

இப்பிரதேசத்தில் இது போன்ற குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதற்காகவே சிறுவர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சு சில முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதில் குறிப்பாக, சிறுவர்கள் பாலியல் ரீதியாகவோ அல்லது உணர்வு ரீதியாகவோ, உடலியல் ரீதியாகவோ பாதிப்புக்கு உள்ளாகுவதைப் பார்ப்பவர்கள் இது தொடர்பாக உடனடியாக இலவச தொலை பேசி அழைப்பின் மூலம் (1929) சிறுவர் பாதுகாப்பு அமைப்பிடம் முறைபாடு செய்வதின் மூலம் குறிப்பிட்ட குற்றவாளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அப்பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர், பிரதேசத்தின் கண்காணிப்புக் குழு, பொலிஸ் நிலையம், பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் போன்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலமும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**முடிவும் பரிந்துரைகளும்**

நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியானது எதிர்கால சந்ததியினரின் அறிவுசார் வளர்ச்சியிலும், ஆளுமையின் மீதும் தங்கிருக்கின்றது. இதனால், குழந்தைகளின் வளர்ச்சியும், அவர்களது சுதந்திரமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இந்தவகையில், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான முற்தடுப்பானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதனை சிறுவர் துஷ்பிரயோகம் நிகழ்வதற்குச் சாதகமான நிலமைகளை நீக்குவதன் மூலம் அடைய முடியும். மேலும், பாதிப்படைந்த சிறுவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கி, அவர்களையும் ஏனைய சாதாரண சிறுவர்களைப் போல வளரச் செய்து சமூகத்தில் பயனுள்ள பிரஜைகளாக ஆக்க முடியும்.

இந்த ஆய்வின் அடிப்படையில் சிறுவர்கள் மேலும் துஷ்பிரயோகத்துக்குள்ளாவதைத் தடுப்பதற்கும், பாதிப்படைந்தவர்களுக்கான புனர்வாழ்வு அளித்து உதவுவதற்குமான பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

1. சிறுவர்களுக்கு ஆபத்தான சூழலையும், சிறுவர் துஷ்பிரயோகங்களை மேற்கொள்பவர்களின் இயல்புகளையும், நல்ல தொடுகை, கெட்ட தொடுகை பற்றிய அறிவையும் ஊட்டல் வேண்டும்.

2. சிறுவர்கள் துஷ்பிரயோகத்தினால் இலகுவில் பாதிக்கப்படும் தன்மையைக் குறைப்பதற்கும், ஆரோக்கியமான உறவுகளை மேம்படுத்துவதற்கும் தேவையான திறன்களையும், பண்புகளையும் அவர்களில் விருத்தி செய்வதும் அவசியமாகும்.

3. சிறுவர் துஷ்பிரயோகங்களை ஆரம்பத்திலேயே தடுப்பதற்கும், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக செயற்படுவதற்கும், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மனவடுக்களைக் குறைப்பதற்குமான பயிற்சிகளையும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், சுகாதார உத்தியோகத்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் நடாத்தல் வேண்டும்.

4. சிறுவர்களைத் தனியாக வீடுகளில் விட்டுவிட்டுச் செல்லும் போது பாதுகாப்பான சூழலை உருவாக்கிவிட்டுச் செல்ல அறிவூட்ட வேண்டும்.

5. பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் மனவெழுச்சிசார் பிரச்சினைகளை சமாளிப்பதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதற்கும் பயிற்றப்பட்டவர்களை பிரதேசங்களில் உருவாக்கல்.

6. பாதிக்கப்பட்டவர்களைத் தற்பாதுகாப்புக்காக உளநல மருத்துவர் ஒருவரிடம் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதன் மூலம் ஏதேனும் உளப்பாதிப்புக்குள்ளானால் அவர்கள் உடனே அதற்கான சிகிச்சைகளைப் பெறுதல் வேண்டும். இது மேலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதை விட்டும் தடுக்கும்.

7. சகல வசதிகளுமுடைய சிறுவர் இல்லங்களை அமைத்து உடலியல் தேவைகளை மாத்திரமல்லாமல் சிறுவர்களின் ஏனைய தேவைகளையும் அறிந்து செயற்படக்கூடிய பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

8. தண்டனைகள் மிக மிகக் கடுமையாக்கப்பட வேண்டும். குற்றங்கள் களைவதற்கு முதலில் வீட்டிலிருந்தே நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும். நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களைத் தடுக்க வேண்டுமானால் பொது மக்கள், பொலிஸ், நீதித்துறை ஆகிய மூன்றும் ஒரே கோட்டில் பயணிக்க வேண்டும் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வது அவசியம்.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுவதைத் தடுக்க வேண்டுமாயின் இப் பணிகள் சமூகப் பணியாகக் கருதப்பட்டு சமூகத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையும் இவை தொடர்பில் விழிப்புணர்வு பெறுவதுடன் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதைத் தமது பொறுப்பாகவும் உணர வேண்டும். இவ்வாறாக சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் மேற்கூறப்பட்ட சமூக நிறுவனங்களின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் அவசியத்தை இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது.

**உசாத்துணைகள்**

National Child Protection Authority (NCPA). 18 June 2002. Correspondence from the Chairperson.
______. 15 June 2002. Correspondence from the Chairperson.
______. 14 June 2002. Correspondence from the Chairperson.

Sri Lanka. 12 November 1998. "National Child Protection Authority Act No. 50 of 1998." [Accessed 14 June 2002]

Sri Lanka Journal of Child Health. 2000. Vol. 29. D.G. Harendra de Silva. "Some Reflection on Child Abuse in Sri Lanka." [Accessed 19 June 2002]
The Sunday Times [Colombo]. 27 January 2002. Laila Nasry. "Accused in Child Rape Case Decamps from the Country." [Accessed 17 June 2002]
______. 6 January 2002. Faraza Farook. "More Trained Personnel to Combat Child Abuse." [Accessed 17 June 2002]

Police Report against Child Abuses, 2016, Kalmunai Division.
NCPA Report against Child Abuse, 2016, DCPO, Divisional Secretariat, Sainthamaruthu.

http://www.engalthesam.lk/?p=55078/ 2016.Aug.19. 5.06pm
http://www.bbc.com/news/world-south-asia-15507304/2012.Jun.01

தயா சோம சுந்தரம், கோகிலா மகேந்திரன், சிவயோகன், சா, (2002), சிறுவர் உளநலம், சாந்திகம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

திலகா சேவியர், (2005), சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், மனித உரிமைகள் இல்லம்.

மானா மக்கீன், (2002), சிறுவர் பாலியல் கொடுமைகள், அஷ்டலட்சுமி பதிப்பகம்.